கணபதி துணை

# சைவசமயப் பொது அறிவு

## வினாக்களும் — விடைகளும்

(மாணவர்களுக்கு ஏற்றது)



வெளியீடு:

**பாலர் ஞானோதய சபை**

**காசிவிநாயகர் தேவஸ்தானம்**

தெல்லிப்பழை

**6-2-1989**

உ

கணபதி துணை

# சைவசமயப் பொது அறிவு

## வினக்களும் — விடைகளும்

தொகுப்பு

[நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை சமயக் கல்வி கற்கும் சைவ மாணவர்களுக்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.]


தொகுத்தவர்: பிரதம குரு

சிவஸ்ரீ சி. கணேசலிங்கக்குருக்கள் அவர்கள்



வெளியீடு:

பாலர் ஞானோதய சபை

காசிவிநாயகர் தேவஸ்தானம்

தெல்லிப்பழை

6-2-1989


வெளியீடு — II

விலை: 10 ரூபா

ஓம்

# சமர்ப்பணம்


எந் தந்தையார் அவர்கட்கும்
தீட்க்ஷாகுரு, வித்தியாகுரு ஆகியோருக்கும்
இந்நூலினைச்
சமர்ப்பணம் செய்கின்றேம்



பாலர் ஞானோதயசபை ஸ்தாபகர்
சிவஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள்



நயினை குருமணி
சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள்



பௌராணிகவித்தகர்
சிவஸ்ரீ வ. குகசர்மா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
இந்துநாகரிகத்துறைத் தலைவர்

# கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்

வழங்கிய

## ஆசியுரை

தெல்லிப்பழை காசிவாசி விநாயகர் ஆலயம் ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகால வரலாற்றுச் சிறப்பினையுடையது. இவ்வாலயத்தின் சூழலில் வாழும் மக்களது சமயவாழ்வு வளம்பெறும் வகையில் இந்த தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் திகழும் பாலர் ஞானோதயசபா ஈடுபட்டு வருகின்றது கடந்த நாற்பத்து இரண்டு ஆண்டுகளாகச் சமய பாட வகுப்புகள், நுண்கலைப்பயிற்சிக்கான வகுப்புகள் போன்றவை இச்சபையின் உதவியுடன் இலவசமாக இங்கு நடந்தேறி வருவது எமக்கு மகிழ்ச்சிதரும் செய்தியாகும், சபையின் இப்பணி பாராட்டுக்குரியது.

இச்சபையின் மூலகர்த்தருள் ஒருவராகிய இவ்வாலய பிரதம குரு சிவஸ்ரீ சி. கணேசலிங்கக்குருக்கள் இந்நூலின் தொகுப்பாசிரியராவர். நான்காம் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரை சைவ சமயம் பயிலும் சைவச்சிறார்களுக்குப் பயன்படத்தக்க அடிப்படை விடையங்களை வினு விடை வடிவில் தொகுத்து நூலாக வெளியிடும் இவரது முயற்சி பெரிதும் வரவேற்கக் கூடியதாகும். சைவச் சிறார்கள் இறுவயதிலிருந்தே தமது சமயம் சார்ந்த அடிப்படை விடயங்களை நன்கு அறிந்திருத்தல் மிகவும் இன்றியமையாததாகும். சமய ஒழுக்கம், பெரியோரைப் பேணுதல், இறைவழிபாடு போன்ற நற்பழக்கங்கள் மேலோங்கவும், தம்முன்னோர்களது சமய சாதனைகளை அறியவும், தாம் வழிபடும் கடவுளரின் சமய உண்மையினைத் தெளிந்து கொள்ளவும் இந்நூல் வழியமைத்துக் கொடுக்கின்றது. சைவசமயம் சார்ந்த பல்வேறு அடிப்படை விடயங்களை சிறுர்களுக்கு ஏற்றவகையில் அமைத்து உருவாக்கியுள்ள ஆசிரியரின் முயற்சி நாவலர் பெருமானின் தொண்டினை அடியொற்றிச் செல்கின்றது.

" பாலர் ஞானோதயம் " என்ற பெயருக்கேற்ப பாலர்களின் ஞானத்தைப் பெருக்கவல்ல ஏறக்குறைய பத்து நூல்கள் இதுவரை இச்சபையின் முயற்சியினால் வெளிவந்துள்ளன. இந்நூல் இவ்வரிசையில் பதினோராவது இடத்தைப் பெறுகின்றது, இச்சபையினதும்

இந்நூலின் தொகுப்பாசிரியரினதும் சீரிய சமயப் பணிகளைச் சைவ உலகு வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியரின் இப்பணி சைவச்சிறார்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும், அவர்களிடையே சமய நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும்.

ஆசிரியரின் இத்தகைய சிவபுண்ணியக் கைங்கரியம் மேன்மேலும் சிறக்கவும் இது போன்ற சமய ஞானத்தை வளர்க்கும் நூல்களை உருவாக்கும் பணிசிறக்கவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருள் துணை நிற்பதாகுக,

பாலர் ஞானோதய சபாவினதும் ஆசிரியரினதும் இத்தகைய சமயப்பணி மேன்மேலும் சிறப்புற்றோங்க எமது மனமுவந்த நல்லாசிகள் உரித்தாகுக

'' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் ''

இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

ப. கோபாலகிருஷ்ணன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
தமிழ்த்துறை விரிவுரையாளர்
கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள்
வழங்கிய

# அணிந்துரை

கடந்த நூற்றாண்டிலே ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் நட்ட சைவக்கல்விப்பயிரை நீரூற்றி வளர்த்தெடுக்கக் காலந்தோறும் பல நிறுவனங்கள் தோற்றம் பெற்றன இத்தகு நிறுவனங்ளில் இன்றும் எம்மத்தியில் உயிர்த்துடிப்புடன் இயங்கிக் கொண்டிருப்பவற்றுள் ஒன்று தெல்லிப்பழைப் பாலர் ஞானோதயசபை தெல்லிப்பழைக் காசிவிநாயகர் ஆலயச்சூழலில் நாற்பத்திரண்டு ஆண்டுகளாகக் இயங் கிவரும் இச்சபை சைவச் சிறுவர்களுக்குச் சமய அறிவையும் ஒழுக்க நிலைகளையும் புகட்டுவதோடு அவர்களின் கலையுணர்வுகளையும் பேணி வளர்ந்து வருகின்றது. இதன் சமய அறிவுப்பணி சார்ந்த செயற் பாடுகளிலொன்றாக நூல் வெளியீட்டுப் பணியும் அமைந்துள்ளது. இவ்வகையில் ஏலவே பத்துநூல்களை வெளியிட்டுள்ள இந்நிறுவனம் பதினோராவதாக சைவசமயப் பொது அறிவு வினாவிடை என்ற இந் நூலைச் சைவச்சிறார் பார்வைக்கு முன்வைக்கின்றது.

சிறுவர்களுக்குச் சமயஅறிவைப் புகட்டும் நூல்கள் அவர்களது உளநிலைக்கேற்ப சிறுசிறு வினாக்களும் அவற்றுக்கேற்ற வகையில் ஓரிரு சொற்கள் சொற்றொடர்கள் என்பவற்றாலான விடைகளும் கொண்டதாக அமைதலே பொருத்தம் எனக்கருதியவர் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான். இதனை அவரது சைவ வினாவிடை புலப்படுத்தி நிற்கும் நாவலர் பெருமானின் அந்நூலை ஆதாரமாகக் கொண்ட தாகவே இந்த வினாவிடை நூலும் அமைந்துள்ளமை தெரிகிறது.

இந்நூல் இருபகுதிகள் கொண்டதாகக் அமைந்துள்ளது. முதற் பகுதி வினாவிடைகளாக அமைவது. இரண்டாம் பகுதியில் உமாபதி சிவாச்சாரியாரின் கொடிக்கவி, திருநாவுக்கரசு நாயனாரின் திருமறை காட்டும் பதிகம், பாலர் ஞானோதய சபையின் கீதம் என்பன இடம்பெற்றுள்ளன. வினாவிடையாக அமைந்த முதற்பகுதியில் சைவ சமய அடிப்படைகள் பலவும் ஒரு தலைப்புக்களில் வகைப்படுத்தப் பட்டுள்ளன. சைவசமயம் தொடர்பான ஆரம்பநிலை அறிவைப் பெற

விழைவோர்க்கான தகவற் குறிப்பாக இவ்வினாவிடைப்பகுதி அமை கிறதெனலாம்.

இந்நூலை ஆக்கித்தந்த சிவஸ்ரீ கணேசலிங்கக்குருக்கள் அவர்கள் பரீலர் ஞானோதய சபையின் தலைமைப் பொறுப்பைப் பல்லாண்டு களாக வகித்துவருபவர், சபையின் பணிகள் பலநிலைகளிலும் சிறந் தோங்குவதற்கு இவரது அயராஊக்கம் முக்கிய அடிப்படை எனின் மிகையாகாது. பலஆண்டுகளாக மாணாக்கர்க்குப் போதித்த அநு பவத்துடன் சைவமுதநூல்கள், நாவலரின் சைவவினாவிடை என் பவற்றினின்று பெறப்பட்ட தகவல்களால் இந்நூலைத் தொகுத்தாக் கியுள்ளார், அவரது இப்பணி சைவர் சிறுவருலகால் வரவேற்கப் படும் என்பதற்கு ஐயமில்லை.

குருக்கள் ஐயா அவர்கள் தொகுத்தமைத்த இன்நூலின் கையெழுத்துப்படியை அச்சேற்றி நூல்வடிவு பெறச்செய்வதில் துணை நின்ற சபைச்செயலாளர் ந. சிவபாலகணேசன் B.A (Hons) அவர் களும் சைவப்பெரியார் ம, சிதம்பரப்பிள்ளை அவர்களும் இத்தகு பணிகளை மேலும் தொடரவேண்டுமென விண்ணப்பிப்பதோடு அவர்களுக்கு காசிவிநாயகப் பெருமான் அருள் என்றும் நிறைக என வாழ்த்தி அமைகின்றேன்.

நா. சுப்பிரமணியன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கலாநிதி கு. பாலசுந்தரம் அவர்கள்

வழங்கிய

# மதிப்புரை

தமிழ்மொழியிற் சிறுவர் இலக்கியம் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைய வேண்டியுள்ளது. சிறுவர்களின் மொழியாற்றலை வளர்த்தல், கலைஆர்வத்தைத் தூண்டுதல், அழகுணர்ச்சியை நெறிப்படுத்தல், பொதுஅறிவை வளர்த்தல், செயல்திறனை வளர்த்தல், அவர்களுக்குச் சமயஉணர்வையூட்டுதல் முதலான இன்னோரன்ன வழிகளில் சிறுவர் இலக்கியம் அமைதல் ஆரோக்கியமானதாகும். இக்குறிக்கோள்களுடன் தோன்றும் சிறுவர் இலக்கியங்களைச் சிறுவர்கள் தாமே படித்து விளங்கிக் கொள்ளக்கூடியவகையில் அமைதல் மிக இன்றியமையாததாகும்.

இப்பின்னணியில் வைத்தெண்ணப்பட வேண்டியதொரு நூலே சைவ சமயப் பொதுஅறிவு வினாக்களும் விடைகளும்" என்ற இச் சிறு தொகுப்பு நூலாகும்; நான்காம் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரை சமயற்கல்வி கற்கும் சைவமாணவர்களுக்கு ஏற்றவகையில் வினாவும் விடையுமாக இந்நூல் தொகுத்தெழுதப்பட்டுள்ளது. தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தானத்தில் இயங்கிவரும் பாலர் ஞானோதய சபையினர் மாணவர்களுக்குச் சமய அறிவை வளர்ப்பதற்கென சமய நூல்களிலிருந்து வினாவிடைகளைத் தொகுத்து அவற்றைத் தாம் நடத்திவரும் சமய பாடவகுப்புக்களிலே ஈராண்டுகாலம் பயிற்றுவித்துள்ளனர். அவையே இப்போது நூலாகவெளி வருகின்றன இவ்வகையில் இச்சபையினரது பணி பாராட்டப்பட வேண்டியதேயாம்.

ஏழுபகுதிகளைக் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது; அவை முறையே பசு—பதிமுதலான, சிவபெருமான், சமயநூல்கள், விநாயகப் பெருமான், முருகப்பெருமான், சமயகுரவர்கள், மெய்யடியார்களும்பிறவும் ஆகும், நூலின் இறுதியிற் திருமுறைப் பாசுரங்கள் சிலவுந் தரப்பட்டுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சைவவினாவிடை காட்டிய வழியில் சமயவிடயங்களை மிக எளிதான முறையில் சிறுவர்கள்

விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் வினவும் விடையுமாக அமையப்பெற இந்நூல் ஆக்கம் பெற்றிருப்பதால், இளம்மாணவர்களுக்கு ஏற்படும் ஐயங்கள் தீர்ந்து, விடயங்களைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இந்நூல் அமைந்துள்ளது.

பாலர் ஞானோதய சபையினர் சிறுவர்களுக்குரியதான மேலும் சமய நூல்களை வெளியிடவேண்டும். சமயத்துறையிலும் கல்வித் தகமையிலும் வல்லோரைக்கொண்டு நூல்களை எழுதுதல் பயன்தரத் தக்கதாம் இந்நூல் மாணவர்களுக்குரிய சிறந்த வழிகாட்டி நூலாகவும் பாடநூலாகவும் பயன்படுமென நம்புகின்றோம்,

இ. பாலசுந்தரம்

# பதிப்புரை

காசிவிநாயகர் தேவஸ்தானத்திலே நாற்பத்திரண்டு ஆண்டுகளாக இயங்கிவரும் நம்சபையானது சமயத்துறைக்கும் இசைத்துறைக்கும் தொண்டாற்றி வருகின்றது. சென்ற சில ஆண்டுகளாகச் சமயசம்பந்தமான நூல்களை வெளியிட்டுவருவதை யாவருமறிவர் இதுவரை பத்துநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வெளியீடுகளுக்கு முன்னாள் மாணவர்கள், சபை அபிமாணிகள் ஆகியோர் நல்லாதரவு நல்கிவருவது போற்றத்தக்கது.

மேற்கூறப்பட்ட நூல்களில் அநேகமானவை சபைத்தலைவரின் ஆக்கங்களாகும். அன்னாரது தொகுப்பு நூலான "சைவசமயப்பொது அறிவு வினாவிடை என்னும் இந்நூல் சபையின் பதினொராவது வெளியீடாகும். இந்நூல்வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து அருந்துணைபுரிந்தவர் சபையின் பாதுகாவலர் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்களாகும். அப்பெருமகனாரின் சேவை மறக்கற்பாலதன்று.

சைவப்பண்பாடு தழைத்தோங்கத் தன்னிகரில்லாத் தொண்டாற்றி வருகின்ற யாழ்ப்பாணம் பல்கலைகக்கழக இந்துநாகரிகத் துறைத்தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆசியுரை வழங்கி நூலுக்கு அழகு செய்துள்ளார்கள். மேலும் எம்சபையுடன் நீண்டகாலத் தொடர்புடையவரும் சமய இலக்கிய வல்லுநரும் யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளருமான கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள் அணிந்துரை அளித்துச் சிறப்பித்துள்ளார்கள், அத்துடன் தமிழ்த்துறையின் இலக்கிய வளர்ச்சியில் நாட்டார் வழக்கியலில் புலமை மிக்கவருமான கலாநிதி இ பாலசுந்தரம் அவர்கள் நமது நூலுக்கு மதிப்புரை வழங்கி நூலை மாண்புறச் செய்துள்ளார்கள். இவர்களுக்குக் காசிஐங்கரன் கருணைபாலிப்பாராக. "நன்றி மறப்பது நன்றன்று" என்ற முதுமொழிக்கிணங்க பேரறிஞர்கள் மூவரும் எமது வேண்டுகோளுக்கிணங்கித் தமது சிரமங்களையும் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது குறுகிய காலத்திற்குள் இவ்வுரைகளைத் தந்துதவியதை யானும் சபையினரும் என்றும் மறக்க முடியாது. அவர்களுக்கு எம்நன்றி உரித்தாகுக.

சபையின் பதினொராவது வெளியீடாகிய இந்நூலைக் குறுகிய காலப்பகுதியில் அழகுற அச்சேற்றி அமைத்துத் தந்த துர்க்கா அச்சக உரிமையாளர்கட்கும் ஊழியர்கட்கும் எமது அன்பான நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

பாலர்ஞானோதயசபை, ந. சிவபாலகணேசன், B. A. (Hons)
காசிவிநாயகர் தேவஸ்தானம், கௌரவ செயலாளர்
தெல்லிப்பழை, 31-1-89

உ

# அறிமுகவுரை



இன்று நாமெல்லாம் விஞ்ஞான உலகில் வாழ்ந்துகொண்டு இருக்கின்ரேம். புதிய பல விடையங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. மாணவர்களுக்குச், சமயநெறிகளைக் கைக் கொள்ளவோ, சமயநூல்களைக் கற்கவோ காலம்போதாமல்இருக்கின்றது. மாணவர்கள் சமய நூல்களைக் கற்றுச் சமய நெறிப்படி ஒழுங்குவார்களேயானல் எவ்வித இடையூறும் நேரிடமாட்டாது. சமயநெறிக்கு வித்திட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள்.

எமது தேவஸ்தானத்திலே நாற்பத்தி இரண்டு ஆண்டுகளாக இயங்கி வரும் பாலர் ஞானேதய சபையானது சமயபாடவகுப்புக்களை நாடத்தி வருகின்றது. இவ்வகுப்புக்களுக்கு நாவலரின் சைவ வினுவிடைகள் திருக்குறள் போன்ற நூல்கள் கற்பிக்கப்பட்டுவருகின்றன 1984ம் ஆண்டிலே பெரியபுராண வசனத்தில் உள்ள நாயன்மார்களது கதைகளைச் சுருக்கமாக எழுதி மாணவர்களுக்குக் கற்பித்தோம். அவைபின் நூலுருப்பெற்றது. சமயத்திலே மாணவர்கள் ஒருபொதுவான அறிவைப் பெறவேண்டும் என்பதற்காக நாவலர் சைவ வினுவிடைகள் நிகண்டு முதலிய நூல்களில் இருந்து வினுவிடைகளைத் தொகுத்துச் சென்ற இரு ஆண்டுகளாகக் கற்பித்து வந்துள்ளோம். மாணவர்கள் இவற்றைக் கற்பதில் பெரிதும் ஆர்வம் காட்டினுர்கள் இத்தொகுதி ஏனைய மாணவர்க்கும் பயன்தரும் என்பதைக் கருத்தில் கொண்ட எமதுசபை நிர்வாகத்தினர் இதற்கும் நூல் உருக்கொடுக்க முன்வந்துள்ளனர். சபையின் பதினெராவது வெளியீடாக இச்சிறுநூல் வெளிவருகின்றது.

இத்தகைய தொகுதிகள் அறிஞர் பெருமக்களால் தொகுத்து வெளியிடப்பட வேண்டியவை; அறிவு ஆற்றல்களில் குறைந்த சிறியேனது இத்தொகுதியில் தவறுகள் இருப்பின் சமயப்பேராளர்கள் மன்னிப்பார்களாக.

இந்நூலில் உமாபதி சிவாச்சாரியார் அருளிய கொடிக்கவியும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருமறைக்காட்டில் கதவு திறக்கப்பாடிய தேவாரமும் சேர்க்கப்பட்டுள்ளன.

சி. க. கு

# பகுதி I பசு - பதி முதலியன

1. இரு சுடர்கள் எவை?
   சூரியன், சந்திரன்
2. இரு வினைகள் எவை?
   நல்வினை, தீவினை
3. இருவகை அறங்கள் எவை?
   இல்லறம், துறவறம்
4. திருமாலின் புதல்வியர் இருவர் யார்?
   அமுதவல்லி, சுந்தரவல்லி
5. அடிமுடி தேடிய இருவர் யார்?
   பிரமா, விஷ்ணு
6. மூவுலகம் யாவை?
   பூமி, அந்தரம், சுவர்க்கம்
7. முக்கனிகள் எவை?
   வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம்
8. நால்வகை நிலங்கள் எவை?
   முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம்
9. நான்கு வேதங்கள் எவை?
   இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்
10. நான்கு பாதங்கள் எவை
    சரியை கிரியை, யோகம், ஞானம்
11. நான்கு மணிகள் எவை?
    கண்டாமணி, கைமணி, கொத்துமணி
    கோயிற் கதவுமணிகள்.
12. நான்கு தீபங்களின் பெயர்கள் தருக?
    அடுக்குத்தீபம், கற்பூரதீபம், கும்பதீபமும்
    தட்டுகளும், பஞ்சாராத்தி.

13. நால்வகைப்பூக்கள் எவை?

நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ.

14. ஐந்து தொழில்கள் எவை?

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

15. ஐவகை வேள்விகள் எவை?

தேவயாகம், பிரமயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மானுடயாகம்.

16. ஆறுபடை வீடுகள் எவை?

பழனி, சுவாமிமலை, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, திருத்தணிகை.

17. ஏழு நதிகள் எவை?

கங்கை, யமுனை, நருமதை, சரசுவதி, காவேரி, குமரி, கோதாவரி.

18. ஏழு முனிவர்கள் யாவர்?

அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன்.

19. எட்டு மலைகள் எவை?

இமயம், மந்தரம், கைலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம்.

20. எட்டுத் திக்குப் பாலகர்கள் யாவர்?

இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு குபேரன், ஈசானன்.

21. சிவ மூலமந்திரம் யாது?

ஸ்ரீபஞ்சாட்சரம்.

22. சிவசின்னங்கள் எவை?

விபூதி, உருத்திராக்கம்.

---

குறிப்பு; (அ) நிலப்பூ 1. நந்தியாவர்த்தம் 2. அலரி, 3. செவ்வரத்தை

(ஆ) நீர்ப்பூ 1. தாமரை, 2. செங்கழுநீர் 3. நீலோற்பலம் 4. அல்லி, 5. ஆம்பல்

(இ) கொடிப்பூ 1. மல்லிகை, 2. முல்லை

(ஈ) கோட்டுப்பூ 1. மந்தாரை, 2. மகிழ், 3. இருவாட்சி

23. ஓமகுண்டம் என்றால் என்ன?
ஓமம் வளர்ப்பதற்கு ஏற்ற இடம்.

24. ஆகுதி என்றால் என்ன?
ஓமகுண்டத்திலே அக்கினியை வளர்த்து நெய் சொரியும் போது அதை ஆகுதி என்கிறோம்.

25. சமித்து என்றால் என்ன?
மா, பலா இவற்றின் சிறுசுள்ளி பலாசு மரத்தின் இலை முதலியன சமித்து எனப்படும்.

26. அவிப்பொருள்கள் எவை?
அறுகு, தர்ப்பை, பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், அன்னம், நெற்பொரி முதலாயின.

27. யாகம் செய்வதனால் ஏற்படும் பயன் யாது?
மழை பொழிகிறது, ஆறு குளங்கள் முதலாயின நிறைகின்றன, நெல் விளைகிறது, நாடு செழிப்படைகிறது

28. பத்தோற்சவம் என்றால் என்ன?
நாயன்மாரை எழுந்தருளச் செய்து அவர்களுக்கு உற்சவம் செய்வது.

29. பத்தோற்சவம் நடைபெறும் கோயில் எது?
சிலாபத்திலுள்ள முன்னேஸ்வரம் கோயில்.

## பகுதி II - சிவபெருமான்

1. சிவபெருமானுக்குரிய வடிவம் எவை?
அருவம், அருவுருவம், உருவம்,

2. தெற்கு நோக்கி இருக்கும் சுவாமி பெயர் யாது?
தட்சணாமூர்த்தி.

3. கங்கையைச் சடையில் தரித்தவர் யார்?
சிவபெருமான்.

4. சைவசமயம் என்பதின் பொருள் யாது?
சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் என்பது பொருள்.

5. தில்லையிலே மூலத்தானத்தில் சிவபெருமான் என்ன வடிவாக இருப்பார்?

சிவலிங்க வடிவாக இருப்பார்.

6. தெட்சணாமூர்த்தியிடம் உபதேசம் கேட்ட நான்கு முனிவர்கள் யார்?

சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர்.

7. சிவபெருமானின் திருக்குமாரர்கள் யாவர்?

விநாயகக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள்.

8. சிவனைக் குறிக்கும் பெயர்கள் நான்கு தருக?

கங்காதரர், நஞ்சுண்டகண்டன், உமாமகேஸ்வரன், பரமேஸ்வரன்.

9. உமை—சிவன் திருமணக்கோலத்தை எவ்வாறு அழைப்பர்

உமாமகேஸ்வரன் என அழைப்பர்.

10. சிவவிரதங்கள் எவை?

சோமவாரவிரதம், திருவாதிரைவிரதம், உமாமகேஸ்வரன் விரதம், சிவராத்திரிவிரதம், பிரதோஷவிரதம் முதலாக மேலும் பல உளவாம்.

11. தேவி விரதங்கள் எவை?

சுக்கிரவாரவிரதம், ஐப்பசியுத்தரவிரதம், நவராத்திரி—விரதம் என மூன்றும்.

12. சோமாஸ்கந்த மூர்த்தம் எத்தகையது?

சிவன்—உமை—கந்தன் மூவரும் ஒன்றாக அமர்ந்திருப்பது.

13. சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றிய தினம் எது?

மகாசிவராத்திரி.

14. சிவராத்திரி எப்போது வரும்?

மாசிமாதத்து அமாவாசைக்கு முதல்நாள் சிவராத்திரிவரும்.

15. சிவபெருமானுக்குத் தாயுமானவர் என்றபெயர் எதனால் வந்தது?

செட்டிச்சி அம்மையாரின் மகளுக்கு மகப்பேற்றின் போது தாயாகப்போய் உதவி செய்தபடியால் அப்பெயர் வந்தது.

16. பசுபதி என்றால் பொருள் யாது?

உயிர்களைக் காக்கும் தலைவன்.

17. நஞ்சுண்ட கண்டன் நடனமாடிய தினம் எது?

பிரதோஷகாலம்.

18. சிவபெருமான் நான்கு முனிவர்களின் சந்தேகத்தை எவ்வாறு தீர்த்தார்?

சுவாமி வலது கைப்பெருவிரலையும் சுட்டுவிரலையும் சேர்த்து மௌனமாக இருந்து ஞானத்தை விளங்க வைத்தார்.

19. கடவுள் அன்பே வடிவானவர் அவரை எவ்வாறு வழிபட்டால் அவரது அருள் கிடைக்கும்?

அன்பே வடிவான கடவுளிடத்தில் மனப்பூர்வமான அன்பைச் செலுத்தி வழிபட்டால் நமது வாழ்வு நிறைவு பெறும்.

20. கோவிலில் கடைசியாக யாரை வணங்க வேண்டும்?

சண்டேசுர நாயனாரை.

## பகுதி III சமய நூல்கள்

1. ''திருவானைக்கா'' இப்பெயர் வந்த காரணம் யாது?

யானை வழிபட்ட காரணத்தால் (இப்பெயர் வந்தது)

2. பசுவின் மறுபெயரென்ன?

கோமாதா.

3. மகேசுரபூசை என்றால் என்ன?

சிவனடியார்களுக்குத் திருவமுது கொடுத்தல்.

4. திருநீற்றுப் பதிகம் பாடியது யார்?

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

5. பெரிய புராணம் பாடியது யார்?

சேக்கிழார் நாயனார்.

6. பசு நிரைகளை மேய்த்த நாயனார் யார்?

திருமூலநாயனார்.

7. பூத்தொண்டு புரிந்த சிவனடியார் யார்?

சிவகாமியாண்டார்.

8. குளம் தோண்டிய நாயனார் பெயரென்ன?

தண்டியடிகள் நாயனார்.

9. இறைவன் புகழை யாழிலே மீட்டிய நாயனார் யார்?

திருநீலகண்டப் பெரும்பாணர்.

10. திருத்தொண்டத் தொகை பாடியது யார்?

சுந்தரமூர்த்தி நாயனார்.

11. அரிச்சந்திரனைப் பொய் சொல்லுமாறு தூண்டியது யார்?

விசுவாமித்திர முனிவர்.

12. சைவ சமய நூல்கள் எவை?

வேதம் ஆகமம், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், மெய்கண்டசாஸ்திரம்.

13. கந்தபுராணம் பாடியது யார்?

கச்சியப்பசிவாச்சாரியார்.

14. திருப்புகழ் யாரால் பாடப்பட்டது?

அருணகிரிநாதரால் பாடப்பட்டது.

15. திருக்குறள் பாடியது யார்?

திருவள்ளுவ நாயனார்

16. பஞ்சபுராணங்கள் எவை?

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்.

17. சரியையாவது யாது?

சிவாலயத்துக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டுசெய்தல்

18. சரியையாவது யாது?

சிவலிங்கப் பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தல்

19. யோகமாவது யாது?

விடயங்களின் வழியே போகா வண்ணம் மனத்தை நிறுத்திச் சிவத்தைத் தியானித்துப் பின்பு தியானிப்போனாகிய தானும் தியானமும் தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுதல்.

20. ஞானமாவது யாது?

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை அறிவிக்கும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடுதல்.

21. புராணம் எனப்படுவது யாது?

பரமசிவன் உலகத்தைப் படைத்தல் அழித்தல் முதலிய வைகளைக் கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தி விரித்து அறிவிப்பது.

22. எழுவகைப் பிறப்புக்களாவன யாவை?

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம்.

23. விபூதியை எவ்வாறு அணிதல் வேண்டும்?

நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து சிவசிவ என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே உத்தூளணமாகவோ அல்லது திரிபுண்டர மாகவோ தரிக்க வேண்டும்.

24. புண்ணியங்கள் எவை?

கடவுளை வழிபடுதல், தாய் தகப்பன் உபாத்தியாயர் குரு முதலிய பெரியோர்களை வணங்குதல், உண்மை பேசுதல், செய்நன்றியறிதல் முதலானவைகள்.

25. பாவங்கள் எவை?

கொலை, களவு, கள்ளுக்குடித்தல், மாமிசம்புசித்தல், பொய் பேசுதல், வியபிசாரம், சூதாடுதல் முதலானவைகள்

26. இறைவனை வழிபடும் இடம் எது?

திருக்கோயில்.

57. திருக்கோயிலுக்கு எவ்வாறு செல்லுதல் வேண்டும்?

ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து விபூதி இட்டுக் கொண்டு போதல் வேண்டும்.

28. திருக்கோயிலுள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும்?

பலிபீடத்தையும் துவசத்தம்பத்தையும் இடபதேவரையும் கும்பிட்டுப் பலிபீடத்துக்கு இப்பால் வடக்கு நோக்கிய சந்நிதியாயினும் மேற்கு நோக்கிய சந்நிதியாயினும் இடப் பக்கத்திலும் தெற்கு நோக்கிய சந்நிதியாயினும் வலப்பக் கத்தில் நின்று அபிஷேகசமயம் நிவேதனசமயம் இல்லாத நேரத்திலே நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

---

குறிப்பு-; (1. நெற்றியிலே சாதாரணமாக அணிதல். 2. தண்ணீரிலே விபூதியைக் குழைத்து வலக்கை நடுவிரல்கள் மூன்றினாலும் ஒன்றோடொன்று தீண்டாமல் அணிதல் வேண்டும்.)

29. அட்டாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கையிரண்டு, செவியிரண்டு மோவாய், புயங்கள் இரண்டு. என்னும் எட்டு அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

(இது ஆண்கள் செய்வது)

30. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து அவயங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

(இது பெண்கள் செய்வது)

31. எவ்வாறு வீதிவலம் வருதல் வேண்டும்?

இரண்டு கைகளையும் சிரசிலேனும் மார்பிலேனும் குவித்துச் சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு கால்களை மெல்ல வைத்துப்பிரதக்ஷணம் பண்ணல் வேண்டும்.

32. எக்காலங்களில் வீதிவலம் வருதல், வீழ்ந்து வணங்குதல் ஆகியவை செய்யக்கூடாது?

அபிடேக காலத்திலும் நிவேதன காலத்திலும் உள்வீதியிலே வலம்வருதல் வீழ்ந்து வணங்குதல் முதலானவை செய்தல் ஆகாது.

33. திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்கள் எவை?

ஆசாரம் இல்லாது போதல், கால்கழுவாதுபோதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர்சிந்துதல் சட்டை இட்டுக்கொள்ளுதல், பாதரட்சை இட்டுக் கொள்ளுதல் முதலாக மேலும் பல உண்டாம்.

34. காலையில் எப்போ நித்திரைவிட்டு எழுதல் வேண்டும்?

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு (2மணித்தியாலம் முன்னே நித்திரை எழுதல் வேண்டும்.

# பகுதி IV - விநாயகப்பெருமான்

1. கயமுகனைச் சங்காரஞ் செய்தது யார்?

விநாயகப்பெருமான்.

2. விநாயகப்பெருமானை எவ்வாறு வணக்க வேண்டும்?

தலையிலே மூன்று முறை குட்டித் தோப்புக்கரணம் போட்டு வணங்க வேண்டும்.

3. விநாயகர் அவதாரம் நிகழ்ந்த வரலாற்றை விளக்குக?

திருக்கைலாய மலையில் மந்திர சித்திர மண்டபத்திற்குப் பார்வதியுடன் பரமேஸ்வரர் எழுந்தருளினர். அங்கே ஏழு கோடி மந்திரசித்திரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றின் நடுவில் சமஷ்டிப்பிரணவம், வியஷ்டிப்பிரணவம் என்ற இரு பிரணவமந்திரங்கள் இருந்தன. அந்த இரு பிரணவங்களையும் சிவமும் சக்தியும் திருக்கண் சாத்தியருளினர்கள் அந்த இருபிரணவங்களும் ஒன்றோடு ஒன்று மருவ அப்பிரணவங்களிலிருந்த பிரணவாகார யானை முகத்துடன் விநாயகப்பெருமான் அவதரித்தார்.

(வாரியார் சுவாமிகள்)

4. விநாயகருடைய திருவுருவ உண்மையை விளக்குக?

விநாயகர்—ஒருகொம்பு, இருசெவிகள், மூன்று திருக்கண்கள் நான்கு திருத்தோள்கள் ஐந்து திருக்கரங்கள், ஆறெழுத்துக்கள் உடையவர். விநாயகருடைய திருமேனி இடையின் கீழே பூதவுடம்பு. இடைக்குமேல் கழுத்துவரை ஆண்தன்மை, கொம்பு இல்லாத பகுதி பெண்தன்மை, யானைத்தலை அஃறிணை. தெய்வசரீரம் உயர்திணை. இவ்வாறு எல்லாம் ஆனதிருவுருவம் விநாயகரது வடிவம். பூதமாய், தேவராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், உயர்திணையாய், அஃறிணையாய் எல்லாமாய் விளங்குபவர் விநாயகர். (வாரியார் சுவாமிகள்)

5. விநாயகப்பெருமானுடைய ஐந்து திருக்கரங்களும் ஆற்றும் செயல்கள் யாவை?

(அ) கும்பம் ஏந்திய திருக்கரம் ஆக்கும் தொழிலையும், (ஆ) மோதகம் ஏந்திய திருக்கரம் காத்தல் தொழிலையும், (இ) அங்குசம் ஏந்திய திருக்கரம் ஒடுக்கல் தொழிலையும், (ஈ) பாசம் ஏந்திய திருக்கரம் மறைத்தல் தொழிலையும் (உ) தந்தம் ஏந்திய திருக்கரம் அருளல் தொழிலையும் புரிகின்றன. எனவே விநாயகர் சிருஷ்டி திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்ற ஐம்பெரும் தொழில்களையும் ஐந்து திருக்கரங்களால் ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றார். (வாரியார் சுவாமிகள்)

6. விநாயகர் வடிவத்தை தருக?

ஓம் என்னும் பிரணவமந்திரத்தின் வடிவத்தை உருவமாகக் கொண்டவர் ஆனைமுகப்பெருமான்.

7. விநாயகப் பெருமானை ஏன் விக்கினேஸ்வரன் என அழைக்கிறோம்?

சகல விக்கினங்களையும் நீக்கி அருள் புரிபவராதலால் அவ்வாறு அழைக்கிறோம்.

8. விநாயகபுராணத்துக்கு மறுபெயர் யாது?

பார்க்கவபுராணம்.

9. ஆவணி மாதத்தில் அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தி விரததினத்தில் சந்திரனைப் பார்க்கக்கூடாது என்கிறார்கள் இதன் காரணம் என்ன?

முன்னொரு காலத்திலே பிரமதேவன் பிள்ளையார் பெருமானுக்குச் செய்த குற்றம் ஒன்று உண்டு. இதற்கு மன்னிப்புக் கேட்டு வணங்கினான். இதனைக் கண்ட சந்திரன் ஏளனக் குறிப்போடு சிரித்தான். பெரியோர்கள் முன் அடக்கமின்றி நகைத்ததைக் கண்ட விநாயகப்பெருமான் ''சந்திரனின் ஒளி மறைந்து நீசனாகக் கடவன்'' என்று சாபங் கொடுத்தருளினார். தேவர்கள் சாபம் நீங்கத் திருவருள் புரியும்படி விநாயகப்பெருமானை வேண்டி நின்றனர் விநாயகப்பெருமான் இதற்கு இரங்கி வருடத்தில் ஒருநாள் ஆவணிமாதப் பூர்வபட்சத் சதுர்த்தசியில் மட்டும் சந்திரனைப் பார்க்கக்கூடாது என்றும் பார்த்தவர்கள் பல துன்பங்களுக்கு ஆளாக நேரிடும் என்றும் விமோசனம் அருளிச் செய்தார்.

10. விநாயகப்பெருமானுக்கு உவந்த மலர் முதலாயின எவை?

அறுகம்புல், வன்னி இலை, மந்தாரமலர், வில்வம், துளசி, மாதுளை, இலந்தை.

11. விநாயகப்பெருமான் விரும்பும் நைவேத்தியப் பொருட்கள் எவை?

அவல், இளநீர், அப்பம், பொரி, தேன், பழவகைகள்.

12. விநாயகரைக் குறிக்கும் பெயர்கள் ஐந்து தருக?

கணபதி. ஆனைமுகன், ஏகதந்தன், உமாசுதன், ஏரம்பமூர்த்தி

13. விநாயக விரதங்கள் யாவை?

விநாயகசதுர்த்தி, விநாயகசஷ்டி, சுக்கிரவார விரதம் என மூன்றும்.

14. விநாயகசஷ்டி விரதம் எப்போ வரும்?

கார்த்திகை மாசத்துக் கிருஷ்ணபக்ஷப் பிரதமை முதல் மார்கழிமாசத்துச் சுக்கிலபக்ஷ சஷ்டியீறாக இருபத்தொருநாளும் விநாயகக்கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம்.

15. அகத்தியர் பிள்ளையாரை எப்படி வணங்கினார்.

தலையில் மூன்று முறை குட்டி வணங்கினார்.

16. எதற்காக அவ்வாறு குட்டிவணங்கினார்?

விநாயகர் அகத்தியருடைய கமண்டலத்திலே நிறைந்த கங்காநீரைத்தட்டித் தரையிலேபாச்சி அது ஆறாகப்பெருகி இந்திரனுடைய பூஞ்சோலைக்கு உபயோகமுறச் செய்த போது சிறுவனாக நின்றவர் விநாயகர் என்பதை அறியாது அவரது தலையிலே குட்டப்போனார் பின்னர் தனதுதவறை உணர்ந்து அகத்தியர் தனது தலையிலே குட்டி வணங்கினார்.

# பகுதி V - முருகப்பெருமான்

1. தேவசேனாதிபதி யார்?

முருகப்பெருமான்

2. ஆறுமுகன் எவ்வாறு தோன்றினார்?

இறைவன் தமது ஐந்துமுகத்தோடு கீழ்நோக்கிய உள்முக முஞ்சேர்ந்து ஆறுதிருமுகங்கள் உடையவராகிச் சிவந்த அனல் போன்ற ஆறுதிருக்கண்களிலிருந்து ஒருவழியாக ஆறுநெருப்புப் பொறியை வெளிவிடவே அந்தப்பொறிகள் காற்றுத் தெய்வத்தினால் எடுத்து அக்கினி பகவானிடம் கொடுக்க, அக்கினிபகவான் கங்கையிடம் சேர்க்கக் கங்கை அப்பொறிகளின் சூட்டைப்பொறுக்க முடியாமல் நாணல் மிகுந்த சரவணப் பொய்கையிலே அவற்றை வைத்தனள். அவை அங்கு ஆறு திருவுருவமாக மாறச் சிவனும் உமையும் அவ்விடம் சென்று அறுமுகவரையும் ஒன்றாக அணைக்கக் கந்தசுவாமியாகத் தோற்றமளித்தார்.

3. சுப்பிரமணிய விரதங்கள் எவை?

சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் என மேலும்பலவுள.

4. கந்தப்பெருமானுடைய படைக்கலம் எது?

ஞானசக்தியாகிய வேலாயுதம்.

5. முருகப்பெருமானை விசேடமாக வழிபடும் திருநாள் எது ?
கந்தசஷ்டி

6. கந்தசஷ்டி எப்போது வரும்?
ஐப்பசி மாதம் பூருவபக்க பிரதமை முதல் சஷ்டி வரை ஆறு நாட்களும் கந்தசஷ்டியாகும்.

7. கதிர்காமம் எங்குள்ளது ?
உறுகுணைப்பதியில் மாணிக்க கங்கைக் கரையில் உள்ளது.

8. கதிர்காமம் என்றால் என்ன பொருள் ?
இணைகள் நிறைந்த கிராமம்.

9. கதிர்காமக்கந்தனுக்கு பூசைசெய்பவர்களை எவ்வாறு அழைப்பர்?
'கப்புறளை' என அழைப்பர்.

10. கதிர்காமத்திலுள்ள யந்திரத்தை அமைத்தது யார் ?
முத்துலிங்கசுவாமிகள்.

11. கதிர்காமத்தின் தீர்த்தம் எது?
மாணிக்க கங்கை

12. ஔவையாருக்கு முருகன் எவ்வாறு காட்சி கொடுத்தார்?
பச்சை மயிலுடனும் வேலாயுதத்துடனும் தோன்றிக் காட்சி கொடுத்தார்.

13. முருகனுக்குச்சுவாமிநாதர் என்ற பெயர் வந்த காரணம்யாது?
பிரணவ மந்திரத்தின் பொருளைப் பிரமா அறியாமையினால் தந்தையாராகிய சிவபெருமான் முருகப்பெருமானிடம் அப்பொருளை வினவ முருகப்பெருமான் குருவாக அமர்ந்து சிவபெருமானுக்கு உபதேசம் செய்தருளினார். இதனால் அவருக்குச் சுவாமி நாதர் என்றபெயர் வந்தது.

14. மாவிட்டபுரம் இப்பெயர் வரக்காரணம் யாது?
மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் நீங்கப்பெற்ற இடம்.

15. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் யாரால் கட்டுவிக்கப் பட்டது?
மாருதப்புரவீகவல்லியால் கட்டுவிக்கப்பட்டது.

16. மாவிட்டபுரம் கோயிலுக்குரிய தீர்த்தம் எது?
கீரிமலைத் தீர்த்தம்

# பகுதி VI சமயகுரவர்கள்

1. பெரியபுராணம் பாடியது யார்?
   சேக்கிழார்நாயனுர்

2. திருவங்கமாலை பாடியது யார்?
   திருநாவுக்கரசுநாயனுர்

3. கோளறு பதிகம் பாடியது யார்?
   திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்?

4. ஞானசம்பந்தர் முதல்பாடிய தேவாரம் யாது?
   '' தோடுடைய செவியன் ''

5. சுந்தரமூர்த்தி நாயனுர் முதல் பாடிய தேவாரம் எது?
   '' பித்தாபிறை சூடி ''

6. நாவுக்கரசர் முதலில் பாடிய தேவாரம் யாது?
   '' கூற்ருயினவாறு ''

7. மணிவாசகப் பெருமான் முதலில்பாடிய திருவாசக அடி எது ?
   '' நமச்சிவாய வாழ்க ''

8. சமயகுரவர்கள் யாவர்?
   திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர், திருநாவுக்கரசுநாயனுர் சுந்தரமூர்த்தி நாயனுர், மாணிக்கவாசக சுவாமிகள்



1. ஞானசம்பந்தர் எங்கே திருவவதாரஞ் செய்தருளினுர்?
   சோழநாட்டிலே, சீர்காழியிலே வைதிகப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினுர்.

2. ஞானசம்பந்தப் பெருமான் செய்தருளிய அற்புதங்கள் மூன்று தருக?

(அ) மூன்றாம் வயதிலே உமாதேவியார் கொடுத்த ஞானப் பாலை உண்டது.

(ஆ) வேதாரிணியத்திலே திருக்கதவு அடைக்கப்பாடினது.

(இ) பாண்டியனுக்கு கூனையும் சுரத்தையும் போக்கினது.

3. ஞானசம்பந்தரின் குருபூசைத்தினம் எது?

வைகாசி மூலம்



1. நாவுக்கரசர் எங்கே திருவவதாரஞ் செய்தருளினர்?

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரிலே வேளாளர் குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினர்

2. நாவுக்கரசர் செய்தருளிய அற்புதங்கள் மூன்று தருக?

(அ) சமணர்களாலே சுண்ணாம்பு அறையிலே பூட்டப்பட்டிருந்தும் வேவாது பிழைத்தது

(ஆ) கல்தோணியாக மிதந்து கரைசேர்ந்தது.

(இ) வேதாரிணியத்திலே திருக்கதவு திறக்கப்பாடினது.

3. நாவுக்கரசரின் குருபூசைத்தினம் எது?

சித்திரைச் சதயம்



1. சுந்தரமூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரிலே சிவப்பிரமணகுலத்திலே திருவதாரஞ் செய்தருளினார்.

2. சுந்தரமூர்த்தி நாயனார் செய்தருளிய அற்புதங்கள் மூன்று தருக?

(அ) முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம்முதலையினின்றும் அழைத்துக் கொடுத்தது.

(ஆ) காவேரீ ஆறுபிரிந்து வழிவிடச் செய்தது.

(இ) வெள்ளையானையில் ஏறிக் கொண்டு திருக்கைலாயத்துக்கு எழுந்தருளியது.

3. சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசைத் தினம் எது?

ஆடிச்சுவாதி



1. மணிவாசகசுவாமிகள் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?

பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூரிலே ஆமாத்தியப்பிரமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்

2· மணிக்கவாசக சுவாமிகளிடத்தில் விளக்கிய அற்புதங்கள் மூன்று தருக?

(அ) புத்தர்களைத் தருக்கத்திலே வென்று ஊமைகளாக்கிப் பின் ஊமைதீர்த்துச் சைவர்களாக்கியது.

(ஆ) திருவாசகத்தையும் திருக்கோவையாரையும்சிவபிரானே எழுதும்படி பெற்றுக்கொண்டது.

(இ) எல்லாரும் காணக் கனகசபையிலுள்ளே புகுந்து சிவத்தோடு கலந்தது;

1· முதன் மூன்று திருமுறைகளும் யாரால் பாடப்பட்டது?
திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடப்பட்டது.

2. நான்காம் ஐந்தாம் ஆறும் திருமுறைகளைப் பாடியவர்யார்?
திருநாவுக்கரசுநாயனார்

3. சுந்தரமூர்த்தி நாயனார் பாடியது எத்தனையாம் திருமுறை?
ஏழாம் திருமுறை

4. திருவாசகமும், திருக்கோவையாரும் எவரால் பாடப்பட்டது?
மாணிக்கவாசக சுவாமிகளால்

இவை எத்தனையாம் திருமுறை?
எட்டாம்திருமுறை

5. ஒன்பதாம் திருமுறை எது?
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

6. திருமூலர் திருமந்திரம் எத்தனையாம் திருமுறை?
பத்தாந்திருமுறை

7. பதினொராம் திருமுறை எது?
அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை

8. பன்னிரண்டாம் திருமுறை எது?
சேக்கிழார்பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம்

9. ஞானசம்பந்தர் எத்தனை ஆண்டுகள் பூமியில் வாழ்ந்தார்?
பதினாறு ஆண்டுகள்

10. நாவுக்கரசர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்து தொண்டுபுரிந்தார்?
எண்பத்தொரு ஆண்டுகள்

11. சுந்தரமூர்த்திநாயனர் பூமியில் எத்தனைஆண்டுகளி வாழ்ந்தார்?
பதினெட்டு ஆண்டுகள்

12. மணிவாசகர் வாழ்ந்த ஆண்டுகள் எத்தனை?
முப்பத்திரண்டு ஆண்டுகள்

13. அப்பர் சுவாமிகள் கைலாயக்காட்சியை எங்கு கண்டார்?
திருவையாற்றிலே கண்டார்

14. ''எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன்'' இவ்வாறு கூறியவர் யார்?
மணிவாசகப்பெருமான்

## பகுதி VII மெய்யடியார்களும் பிறவும்

1. குறுமுனி என அழைப்பது யாரை?
அகத்தியமுனிவரை

2. திருமுறைகளை வகுத்தவர் யார்?
'' நம்பியாண்டார்நம்பி ''

3. தண்ணீர்ப்பந்தல் அவைத்த நாயனர் பெயரென்ன?
அப்பூதிஅடிகள்

4. சந்தான குரவர்கள் யார்?
மெய்கண்டதேவர், உமாபதி சிவாச்சாரியார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர்

5. பொள்ளாப்பிள்ளையார் கோவில் எங்குஉண்டு?
திருநாரையூரில் உண்டு

6 காரைக்காலம்மையார் பாடிய நூல்கள் எவை?
அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை

7. இலங்கையில் தேவாரப்பாடல் பெற்ற சிவ தலங்கள் எவை?
திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்.

8. திருக்கேதீஸ்வரம் எங்கே இருக்கிறது?
மன்னர் மாவட்டத்தில் உள்ள மாந்தைக் கிராமத்தில் பாலாவிக்கரையில் உள்ளது.

9. கேதீஸ்வரம் என்ற பெயர் வந்த காரணம் யாது?

கேது வழிபட்ட காரணத்தால் அப்பெயர் வந்தது.

10. திருக்கேதீஸ்வரத்தின் தீர்த்தம் எது?

பாலாவித்தீர்த்தம்.

11. கோணேஸ்வரம் கோயில் எங்கு உள்ளது?

கோணமாமலை உச்சியில் உள்ளது.

12. கோணேஸ்வரத்தின் தீர்த்தம் எது?

பாபநாசச்சுனை.

13. ஔவையார் இயற்றிய நூல்கள் எவை?

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரைஎன்பன

14. சாமகானம் பாடியது யார்? எப்போது பாடினார்?

இராவணன், இவர் கைலையங்கிரியைத் தனது புயங்களினால் தூக்க முயன்றபோது சிவபெருமான் தனது கால் பெருவிரலினாலூன்ற மலையில் நெருக்குண்டபோது சாமகானம் பாடினார்.

(இதுவும் வாகீசமுனிவர் சொற்படி)

15. தமிழர்களின் திருநாட்கள் எவை?

தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி முதலாயின.

16. தீபாவளி எப்போது வரும்?

ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முதல்நாள் தீபாவளி வரும்.

17. கோயில் என்றால் பிரதானமாக எந்தக் கோயிலைக் குறிக்கும்?

சிதம்பரம் கோயிலைக் குறிக்கும்

18. செம்மனச்செல்வியின் மறுபெயரென்ன?

"வந்தி"

19. கூலியாளருக்கு அடித்தஅடி எவர்கள் மேல்பட்டது?

சகல ஆன்மாக்கள் மேலும் பட்டது.

20. நவரத்தினங்கள் எவை?

மரகதம், பவளம், நீலம், வச்சிரம், பதுமராகம், முத்து, கோமேதகம், புருடராகம், வயிடூரியம்.

21. நவக்கிரகங்கள் எவை?

சூரியன், சந்திரன் சுக்கிரன், செவ்வாய், புதன், வியாழன் சனி, ராகு, கேது

22. வேதாகமங்கள் எல்லாம் சிவபிரானை எவ்வாறு கூறுகின்றன?
சகலசீவதயாபரன் என்று கூறுகின்றன

23. சிவபூசையின் பலனால் மரணத்தை வென்றவர் யார்?
மார்க்கண்டேய முனிவர்

24. புறாவைக் காப்பாற்றுவதற்காகத் தசையைக் கொடுத்தமன்னன் யார்?
சிபிச்சக்கரவர்த்தி

25. திருப்பல்லாண்டு பாடியது யார்?
சேந்தனார்

26. திருவிசைப்பா பாடியது யார்?
திருமாளிகைத்தேவர்

27. திருமந்திரம் யாரால் பாடப்பட்டது?
திருமூலநாயனாரால்

28. திருக்காளத்தி மலையிலே சுவாமிபெயர் யாது?
குடுமித்தேவர்

29. கண்ணப்பநாயனாருக்குக் கிடைத்த பேறு என்ன?
"மாறிலாய் என் வலபக்கத்தில் நிற்க" என்று தனது வலபக்கத்தில் நிற்கும்போது அருளப்பட்டது.

30. கோபுரத்தின் மறுபெயரென்ன?
தூலலிங்கம்

31. ஆறுமுகநாவலர் எங்கே பிறந்தார்?
யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தார்

32. நாவலர் பெருமான் தமது முதற்பிரசங்கத்தை எங்குநிகழ்த்தினார்?
வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலே நிகழ்த்தினார்

33. நாவலர் செய்த தொண்டுகள் எவை?
(அ) அச்சு இயந்திரங்கள் ஸ்தாபித்து அதன்மூலம் நூல்கள் வெளியிட்டார்.
(ஆ) சமயப்பிரசங்கங்கள் நிகழ்த்தினார்

34. நாவலர் இயற்றிய நூல்கள் எவை?
முதலாம், இரண்டாம், சைவவினாவிடைகள், நான்காம் பாலபாடம், பெரியபுராணவசனம், கந்தபுராணவசனம்.

35. "காங்கேயன்துறை" இப்பெயர் வந்தகாரணம் யாது?

"காங்கேயன்" என்ற முருகன்சிலையை வடபாலுள்ள துறைமுகத்தில் இறக்கியபடியால் இப்பெயர் வரலாயிற்று

36. கொழும்பு — பொன்னம்பலவாணேசர் கோயில் யாரால் கட்டுவிக்கப்பட்டது?

சேர்—பொன் இராமநாதன்துரை அவர்களால் கட்டுவிக்கப்பட்டது

37. வண்ணை—வைத்தீஸ்வரன் கோயில் எங்குண்டு?

காங்கேசன் துறைவீதியில் அமைந்துள்ளது.

38. வைத்தீஸ்வரன் கோவில் யாரால் கட்டுவிக்கப்பட்டது?

வைத்திலிங்கச் செட்டியாரால் கட்டுவிக்கப்பட்டது,

39. வைத்திலிங்கச் செட்டியாரின் குரு யார்?

கூழங்கைத்தம்பிரான்

40. இராமகிருஷ்ண பரமகம்சரின் சீடராக விளங்கியவர் யார்?

அன்னாரது மனைவியார்

41. யோகர்சுவாமிகளின் குரு யார்?

செல்லப்பாசுவாமிகள்

42. யோகர்சுவாமிகளின் உபதேசங்களை எவ்வாறு அழைப்பர்?

"நற்சிந்தனைகள்" என அழைப்பர்

43. கோவிலில் விளங்கும் மண்டபங்கள் ஐந்தின் பெயர் தருக?

அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், வசந்தமண்டபம். ஸ்தம்பமண்டபம்

44. "நீறில்லா நெற்றிபாழ்" இதுயார் கூற்று?

ஔவையார் கூற்று

45. உருத்திராக்கம் என்றால் என்ன பொருள்?

உருத்திரனுடைய கண் என்பது பொருள்

46. "சைவசமயி" என அழைப்பதற்கு என்ன தகுதி வேண்டும்?

சிவதீட்சை பெறுதல் வேண்டும்

47. திருமுறைகளுக்குப் பண்ணடைவு செய்தது யார்?

திருநீலகண்டரின் மரபிலேவந்த பெண்ணினால் பண்ணடைவு செய்யப்பட்டது.

48. திருவாதிரை எப்போ வரும்?

திருவெம்பாவையின் பூர்த்தியே திருவாதிரையாகும்

49. தானாகவே தோன்றிய இலிங்கத்தை எவ்வாறு அழைப்பர்?

சுயம்புலிங்கம்

50. சேக்கிழார் புராணம் பாடியது யார்?

உமாபதி சிவாச்சாரியர்

51. சிவாலயத்தொண்டுகள் ஐந்து தருக?

திருவிளக்கிடுதல், திருமெழுக்கிடுதல், திருநந்தவனம் வைத்தல், பத்திரபுட்பம் எடுத்தல், மாலைகட்டுதல்

52. காரைக்கால் அம்மையார் பேய்வடிவை எதற்காக வேண்டிப் பெற்றார்?

கணவன் தன்னை வணங்கிய காரணத்தால் தசைப்பொதி வேண்டாம் என்று பேய்வடிவை வேண்டிப்பெற்றார்.

53. திருத்தொண்டர் புராணம் பாடியசேக்கிழார் பெருமானுக்குச் சோழமகாராசாவினால் வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்யாது?

தொண்டர் சீர்பரவுவார்

54. திருக்குறள் பாடியது யார்?

திருவள்ளுவநாயனார்

55. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள்?

நூற்றுமுப்பத்துமூன்று (133) அதிகாரங்கள்.

56. திருக்குறளில் உள்ள பாக்கள் எத்தனை?

ஆயிரத்து முன்னூற்று முப்பது (1330)

57. பஞ்சபாண்டவர்கள் யார்?

தருமர், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்.

58. பஞ்ச புராணங்கள் எவை?

தேவராம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்.

ஓம்

# உமாபதி சிவாச்சாரியார் அருளிய

# கொடிக்கவி

திருச்சிற்றம்பலம்

1. ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளடராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்படிக் கொடிகட்டினனே

2. பொருளாம் பொருளேது போதாது கண்ணே
திருளாம் வெளியே திரவே(து) ... அருளாளா
நீபுரவா' வையமெலாநீஅறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

3, வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை ... நோக்கிப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கு மருள் நல்கக் கொடி.

4. அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப்பெருவே ழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக்கொடி.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமறைக்காட்டில்

அருளிய

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினுர் வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணினுலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே.

2. ஈண்டு செஞ்சடை யாகத்துளீசரோ
மூண்டகார் முகலின் முறிக்கண்டரோ
ஆண்டு கொண்ட நீயருள் செய்திடும்
நீண்டமாக் கதவின் வலிநீக்குமே.

3. அட்ட மூர்த்திய தாகிய வப்பரோ
துட்டரீ வான்புரஞ் சுட்டக வண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பாமரோ
சட்டவிக் கதவந் திறப் பிம்மினே-

4, அரியநான் மறையோதிய நாவரோ
பெரியவான்புரஞ் சுட்ட வண்டரோ
விரிகொள் கோவண வாடை விருந்தரோ
பெரியவான் கதவம் பிரிவிக்கவே.

5, மலையினீடிருக்கும் மறைக் காடவரோ
கலைகள் வந்திறைஞ்சுங் கழலேத்தரோ
விலையின் மாமணி வண்ண வுருவரோ
தொலைவிலாக் கதவந் துணைநீக்குமே;

6. பூக்குந் தாழை புறணியரு கெலாம்
ஆக்குந்தன் பொழில்சூழ் மறைக்காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே,

7. வெந்தவெண் பொடிப் பூசும் விகிர்தரோ
அந்தமில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடியார் வந்திறைஞ்சிட
இந்தமாக் கதவம் பினிநீக்குமே.

8. ஆறு சூடு மணி மறைக்காடரோ
கூறுமா துமைக் கீந்த குழகரோ
ஏறதேறிய வெம்பெரு மானிந்த
மாறிலாக் கதவம் வலிநீக்குமே,

9. சுண்ண வெண் பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணியேறு நந்தேறும் பரமரோ
அண்ணலாதி யணி மறைக் காடரோ
திண்ணமாக் கதவந் திறப்பிம்மினே.

10, விண்ணு ளார் விரும்பி யெதிர்கொள்ளவே
மண்ணுளார் வணங்கும் மறைக்காடரோ
கண்ணினு லுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே.

11, அரக்கனை விரலா லடர்த்திட்டநீ
இரக்க மொன்றில் ரெம்பெருமானிரோ
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக் கவிக் கதவந் திறப்பிம்மினே,

திருச்சிற்றம்பலம்

# தெல்லிநகர்
# பாலர் ஞானோதயசபையின் கீதம்

போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம்
வேதரூப மாயமைந்த நாதப் பிரம்ம வேழமுகன்
பாதந் தன்னைப் பணிந்து நல்ல ஆசிதனைப் பெற்று வாழப் (போற்)

தெல்லிநகரில் வதியும் காசிவிநாயகர் அருளினிலே
நல்லியற் கலைகள் யாவும் நலமுடனே வளர்ந்துவரப் (போற்)

இயலும் இசையும் நாடகமும் ஏமமுடன் இயங்கிவர
அயலவரின் அரும்பணியால் தமிழன்னை உளம்மகிழப் (போற்)

தூய உள்ளங்கொண்ட பாலர்பயிலும் சந்நிதானத்திலே
ஆயகலைகள் வளர்த்த ஆன்றோர் பலரின் சேவைதனைப் (போற்)

பண்ணிசையும் எண்ணரிய நுண்கலைகள் வளர்ந்துவரும்
பண்ணரிய சேவை செய்யும் ஆசிரியர் பணிகளை நாம் (போற்)

ஆண்டுபல காலமாக அரியசேவை செய்து வந்த
சிவகடாட்சக்குருக்களின் கருணையான உள்ளந்தன்னைப் (போற்)

சைவசமயத் தொண்டே தமக்கினிய நல்ல தொண்டு ஆக
பிரியமுடன் பிள்ளைகளுக் கரியகல்வி ஊட்டினரைப் (போற்)

பலரின் இனியவேண்டுகலால் பாலர் ஆரண சபைதனையே
தாபிதம் செய்த பெருமைக்குரிய பெரியார் இவரன்றோ (போற்)

தந்தைசெய்த நற்பணியைச் சிந்தையிலே நினைவிருத்தி
மைந்தன் ஐயா செய்யும் எத்தனை ஈசன்பணிகளன்றோ (போற்)

கடமையோடு பணிபுரியும் கணேசலிங்கக் குருக்கள்ஐயா
தலைமையிலே இயங்கிவரும் பாலர்சபையின் சேவைதனைப் (போற்)

நிருவாகசபையிலுள்ள நீதியாளர் பணிகளை நாம்
ஆர்வமுடன் வரவேற்று அறிவுரைகள் பெற்றுவாழப் (போற்)

புனிதமான தலத்திலே இனிமையான இயலிசைகள்
பொங்கிப் பெருகிப் பொலிந்துவரப் பொறுமையாக
உழைப்பவரைப் (போற்)

அம்பிகையின் மூத்தசுதன் தும்பிக்கையால் பாதந்தன்னை
நம்பிக்கையால் துதித்துப் பாலர் ஞானசபை வளர்ந்திடவே (போற்)

ஆக்கம் — மிருதங்கவித்துவான் க. ப. சின்னராசா அவர்கள்

அச்சகம், சென்னை